**செய்தி வெளியீடு எண்:044** **நாள்:12.05.2021**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (12.05.2021), அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர்களுடன் காணொலி வாயிலாகக் கலந்துரையாடினார். அதுபோது, செவிலியர் தினத்தை முன்னிட்டு அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்த மாண்புமிகு முலமைச்சர் அவர்கள், கொரோனா பெருந்தொற்றுக்கு எதிரான போரில் முன்களப் பணியாளர்களாக செவிலியர்கள் ஆற்றி வரும் பணிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார். **இந்நிகழ்வில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதன் விவரம் வருமாறு:**

அனைவருக்கும் வணக்கம்!

எல்லோரும் எப்படி இருக்கிறீர்கள்? முதலில் உங்கள் அனைவருக்கும் செவிலியர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரை, ‘கருணையின் வடிவம்’ என்று செவிலியரைச் சொல்வேன்.

அன்பு செலுத்துவதும் – அதை வெளிப்படுத்துவதும் – ஆகிய இரண்டும் இணைந்ததுதான் உங்களது வாழ்க்கை! செவிலியர் என்பதை ஒரு வேலையாக இல்லாமல் சேவையாக ஆற்றிவரும் உங்களைப் பாராட்டுகிறேன்!

கடந்த ஓராண்டு காலம் – கொரோனா என்ற பெருந்தொற்று காலம்! உங்கள் சேவை – பல மடங்கு உயர்ந்துவிட்டது. இதை எப்படி எதிர் கொண்டீர்கள் என்பதை ஒவ்வொருவராகச் சொல்லுங்கள்!

**(செவிலியர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்துரையாடினர். அப்போது செவிலியர்களின் பணி நேரம், அவர்கள் குடும்பத்தினருடன் செலவிடும் நேரம், அவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்டவைக் குறித்து கேட்டறிந்தார்)**

மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் சேவைக்கு பணத்தை ஈடாக கொடுத்துவிட முடியாது. ஆனால் அரசு காட்டும் நன்றியின் அடையாளமாக, நிதி அறிவிப்பை இன்றைக்குக் காலையில் அறிவித்துள்ளேன்.

கொரோனா தடுப்பு பணியில் ஈடுபட்டு உயிரிழந்த 43 மருத்துவர்களின் குடும்பங்களுக்கு தலா 25 லட்சம் ரூபாய் இழப்பீடாக அறிவித்துள்ளேன்.

மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட முன்களப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மூன்று மாத காலத்திற்கான ஊக்கத்தொகையாக மருத்துவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாயும் – செவிலியர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும் – தூய்மைப் பணியாளர்கள், ஆய்வுக்கூட பணியாளர்கள், சி.டி. ஸ்கேன் பணியாளர்கள், அவசர மருத்துவ ஊர்திப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாயும் – பட்டமேற்படிப்பு மருத்துவர்கள், பயிற்சி மருத்துவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என அறிவித்துள்ளேன்.

இந்த நிதி என்பது – எங்களது நன்றி உணர்ச்சிக்கான அடையாளமாக வழங்குகிறோம்.

கொரோனா தொற்று பரவாமல் தடுக்க ஊரடங்கு அறிவித்துள்ளோம்.

தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை முழுமையாக காக்கும் பணியையும் மும்முரமாக முடுக்கி விட்டிருக்கிறோம்.

இதற்கு முழு உதவியும் செய்து தங்களின் உயிரைப் பற்றி கவலைப்படாமல் செயல்படும் செவிலியர்கள் அனைவரையும் மீண்டும் பாராட்டுகிறேன்!

**இவ்வாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செவிலியர்களுடன் கலந்துரையாடினார்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**